**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை - **திரு T. சோழவேந்தன்., B.A.B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம் சித்திரை மாதம் 14-ம் நாள்

------

**இடைமனு எண். 1/2021 -இல் அசல் வழக்கு எண்.4/2017**

பாலகிருஷ்ணன் ...மனுதாரர்/ வாதி....

...எதிர்....

1. பாண்டியன்
2. பிரவின்
3. சந்தோஷ்குமார் ...1 முதல் 3 எதிர்மனதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்
4. அகோரம்
5. நடராஜன் 4,5 எதிர்மனுதாரர்கள்/ புதிதாக சேர்கக்க கோரும் நபர்..

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 12.04.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ.ராம்குமார் அவர்களும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கார்த்திகேயன் அவர்களும், 4-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் நேரடி வாரிசு இல்லை என்று 07.12.2022 அன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட நிலையில் 5-ம் எதிர்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

4,5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 4,5 பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/ வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்

அசல் வழக்கில் மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/

பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளனர். அதில் இடைமனு எண்.12/2017-ல் இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால தடை உத்தரவு 26.04.2017 அன்று பெற்றார். இந்நிலையில் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது தாவா சொத்தின் ஒரு பகுதியை 1-ம் பிரதிவாதி கடந்த 25.07.2018-ல் ஆக்கிரமித்து வீடு கட்ட ஏற்பாடு செய்தார். தாவா வழக்கின் பரிகாரத்தை வசப்பரிகாமாக மாற்ற வேண்டிய அவசியம் மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்டுள்ளது. தாவா முதல் அயிட்ட சொத்து மனுதாரர்/ வாதியின் தந்தை பெயரிலும், இரண்டாவது அயிட்ட சொத்து மனுதாரா/வாதி மற்றும் மனுதாரர் சகோதராகள் அகோரம் மற்றும் நடராஜன் பெயரிலும் தனிதனியாக பட்டா உள்ளது. மேலும் இவ்வழக்கிலவ் மனுதராார்/வாதியின் சகோரர்களான அகோரம் மற்றும் நடராஜனை வாதிகளாக மனுதாரருடன் சேர்த்து இவ்வழக்கை நடத்த தரப்பினராக முன் வராததால் அவர்களை வாதிகளாக இவ்வழக்கில் சேர்க்க இயலவில்லை. மேற்படி தரப்பினர்களாக இவ்வழக்கில் 4, 5 எதிர்மனுதாரர்கள்/ புதிய தரப்பினர்களாக சேர்க்க தற்பேழுது மனுதாரருக்கு சட்டகருத்துரை கிடைக்கப்பெற்றுள்ளது. ஆதனால் 4, 5 எதிர்மதாரர்களும் இந்த வழக்குக்கு முக்கிய தரப்பினர்கள் ஆவார்கள். வீன் அனாவசிய கட்சிகளை தவிர்க்கும் பொருட்டு 4, 5 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் புதிய தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய நியமாக உள்ளது. எனவே 4,5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 4,5 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

3. 2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை 1 மற்றும் 3-ம் எதிர்மனுதாரர்கள் தங்களுடையதாகவும் ஏற்றுக்கொள்ப்பட்ட எதிருரையின் சுருக்கம்

இந்த வழக்கு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்க தக்கதல்ல. இந்த எதிருரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் தவிர வழக்கின் இதர விபரங்கள் அனைத்தும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் மறுக்கப்படுகின்றன. அவைகளை வாதி சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். கடந்த 25.07.2018-ம் தேதி 1-ம் எதிர்மனுதாரர்/1- பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து மனுவில் கூறியுள்ளது முற்றிலும் தவறானது அதனை மனுதாரர்/வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். தாவா சொத்தினை மனுதாரர்/வாதியின் தந்தை மற்றும் அவர்களது சகோதரர்கள் பிள்ளைகள் வகையராவைச் சேர்ந்தவர்கள் 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள். அதன் பின்னிட்டு 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டி குடியிருந்து ஆண்டு அனுபவித்து வருகிறார். அதனை மறைத்து மனுதாரர்/வாத பொய்யான மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனு சொத்து 1-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியின் சட்டப்பூர்வமான அனுபவத்தில் இருந்து வருகிறது. இந்த வழக்கில் மனுதாரர்/வாதி

புதியதாக தரப்பினா்களை சோ்க்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. மனுதாரா்/வாதி வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளா். எனவே மனுதாரா் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீா்வுக்குரிய பிரச்சனை

1. மனுதாரா்/ வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரா் மற்றும் எதிா்மனுதாரா்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

6. **தீா்வு**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்குக் கோப்பு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கில் மனுதாரா்/வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளாா் என்றும், கடந்த 26.04.2017 அன்று இடைமனு எண்.12/2017-ல் இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளாா் என்றும், தாவா முதல் அயிட்ட சொத்து மனுதாரா்/வாதியின் தந்தை பெயரிலும், இரண்டாவது அயிட்ட சொத்து மனுதாரா்/வாதி மற்றும் மனுதாராின் சகோதராகள் அகோரம் மற்றும் நடராஜன் பெயரிலும் தனிதனியாக பட்டா உள்ளது என்றும், மேலும் இவ்வழக்கில் மனுதரா/வாதியின் சகோரா்களான அகோரம் மற்றும் நடராஜனை வாதிகளாக மனுதாரருடன் சோ்த்து இவ்வழக்கை நடத்த தரப்பினராக முன் வராததால் அவா்களை வாதிகளாக இவ்வழக்கில் சோ்க்க இயலவில்லை என்றும், மேற்படி தரப்பினா்களாக இவ்வழக்கில் 4, 5 எதிா்மனுதாரா்கள்/புதிய தரப்பினா்களாக சோ்க்க தற்பேழுது மனுதாரருக்கு சட்டகருத்துரை கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், எனவே 4,5 எதிா்மனுதாரா்களை அசல் வழக்கில் 4,5 பிரதிவாதிகளாக சோ்க்க அனுமதிக்க வேண்டி மனுதாரா்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனா். அசல் வழக்கில் 4,5 எதிா்மனுதாரா்களை ஒரு தரப்பினராகச் சோ்க்க வேண்டி மனுதாரா்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பதால் 1 முதல் 3 எதிா்மனுதாரா்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்று மனுதாரா் தரப்பில் வாதம் செய்யப்பட்டது. 1 முதல் 3 எதிா்மனுதாரா்கள் தரப்பில் தாவா சொத்தில் 1-ம் எதிா்மனுதாரா்/1-ம் பிரதிவாதி கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டி குடியிருந்து ஆண்டு அனுபவித்து வருகிறாா். மனுசொத்தில் 1-ம் எதிா்மனுதாரா்/1-ம் பிரதிவாதி சட்டப்பூா்வாமான அனுபவத்தில் இருந்து வருகிறாா். மனுதாரா் பொய்யா மனுவினை தாக்கல் செய்தள்ளாா். இந்த வழக்கில் புதியதாக தரப்பினா்களை சோ்க்க வேண்டிய அவசிம் ஏதும் இல்லை. வழக்கை காலம் கடத்த மனு

தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

7. 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் வழக்கில் அவசியமான தரப்பினார் சேர்க்கப்படவில்லை என்று கட்சி செய்துள்ள நிலையில் அதன் அடிப்படையில் நீதிமன்றமும் அதற்கான எழுவினா வனையப்பட்டுள்ளது. 4, 5 எதிர்மனுதாரர்கள வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பதால் சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு நிலுவையில் இருந்த காலத்தில் 4-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் மனுதாரர் தரப்பில் 4-ம் எதிர்மனுதாரருக்கு நேரடி வாரிசு யாரும் இல்லை என்று 07.12.2022-ல் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 5-ம் எதிர்மனுதாரரை தரப்பினாராக சேர்ப்பதால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு ஏற்படும் (Multiplicity Proceedings) ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு 5-ம் எதிர்மனுதாரரை இந்த அசல வழக்கில் தரப்பினாராக சேர்ப்பதால் எவ்வித பாதிப்பும் ஏற்பபோவதில்லை என்பதால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதித்து உத்தரவு பிற்ப்பிப்பது என்றும், இம்மனுவின் தன்மை கருதி செலவுத்தொகையை தரப்பினர்களை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஏப்ரர் மாதம் 27-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை-

(ஓம்/T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சீர்காழி.

இடைமனு எண்.1/2021-ல்
அசல் வழக்கு எண்.4/2017
நாள்.27.04.2023